தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக

நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

5 - 12 -2025

புதுடெல்லி, டிச. 5 -

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் 1.12.2025 அன்று தொடங்கியது. இத் தொடரில் மக்களவை, மாநிலங்களவை இரு அவைகளிலும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் நலனுக்காக முன்னேற்றத்திற்காக நேற்று (5.12.2025) எழுப்பிய கேள்விகள் வருமாறு:

1. தமிழ்நாட்டில் மெகா உணவு பூங்காக்களின் செயல்பாடுகள் என்ன?

கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் எம்.பி.

தமிழ்நாட்டில் அனுமதிக்கப்பட்ட மற்றும் செயல்படத் தொடங்கிய மெகா உணவு பூங்காக்களின் எண்ணிக்கை குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். தமிழ்நாட்டில் செயல்படாத அல்லது தாமதமாக செயல்படத் தொடங்கிய மெகா உணவு பூங்காக்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அதற்கான காரணங்கள் என்ன? இந்த தாமதங்களைச் சமாளிக்க அரசாங்கம் எடுத்துள்ள தேவையான நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

2. ட்ரம்ப்பை சந்திப்பாரா மோடி?

தேனி தங்க தமிழ்செல்வன் எம்.பி. கோவை கணபதி ராஜ்குமார் எம்.பி.

சமீப காலமாக தொடர்ச்சியாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்திய பொருட்கள் மீதான வரியை உயர்த்துவது, அமெரிக்காவில் வேலை செய்யும் இந்தியர்களின் பணிவாய்ப்பை உறுதியற்றதாக மாற்றுவது, இந்தியாவின் போர் நிறுத்தம் குறித்து விமர்சனக் கருத்துகள் சொல்வது என பல்வேறு வகையில் இந்தியாவிடம் முரணான போக்கில் செயல்பட்டு வருகிறார். அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த பிரதமர் மோடி டொனால்ட் ட்ரம்ப்பை இந்தியா அழைத்துள்ளாரா என்றும் இந்த பிரச்சினைகள் குறித்து பேசி சுமூகமாக முடிவு எடுக்க இந்தியாவின் சார்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ்செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர். மேலும் பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று அமெரிக்க அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளனரா என்றும் கேட்டுள்ளனர்.

3. பாதுகாப்பற்ற உணவுப் பொருட்கள் மீது தடை விதிக்காதது ஏன்?

பொள்ளாச்சி ஈஸ்வரசாமி எம்.பி. கேள்வி

ரொட்டியில் மாவை வெள்ளையாக்குவதற்காகவும் மாவின் அடர்த்தியை கூட்டுவதற்காகவும் பயன்படுத்தப்படும்அசோடிகார்பனமைடு (ADA) மற்றும் பேக்கரி மற்றும் பேக்கேஜ் செய்யப்பட்ட உணவுப் பொருட்களில் பயன்படுத்தப்படும் பியூட்டிலேட்டட் ஹைட்ராக்சியானிசோல் (BHA) ஆகியவை புற்றுநோய், ஒவ்வாமை மற்றும் சுவாச நோய்கள் போன்றவற்றை உண்டாக்குகிறது எனும் ஆய்வு முடிவுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ADA முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் BHA பயன்படுத்துவதற்கும் உலகளவில் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளது. ஆனால் இந்தியாவில் தொடர்ந்து ரொட்டி மற்றும் பிற உணவுப் பொருட்களில் அவற்றின் பயன்பாட்டை அனுமதிப்பது ஏன் என அவர் கேட்டுள்ளார்.

நாட்டின் நச்சுயியல் சான்றுகளைக் கருத்தில் கொண்டு, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் (FSSAI) ADA மற்றும் BHAக்கான அனுமதிக்கப்பட்ட வரம்புகளை சமீபத்தில் மறுமதிப்பீடு செய்துள்ளதா? நாடு முழுவதும் அனைத்து உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் பேக்கரிகளில் தரநிலைகளைத் திருத்துவதற்கும் கடுமையான தடைகளை அமல்படுத்துவதற்கும் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

4. H-1B விசாவால் பாதிக்கப்படும் இந்தியர்கள் - தீர்வு என்ன?

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கேள்வி

இந்திய ஏற்றுமதிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை மோசமாக பாதிக்கக்கூடிய அமெரிக்காவின் கட்டண கட்டமைப்புகள் மற்றும் H-1B விசா கொள்கைகள் குறித்து ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதை கண்டித்து நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் மேலும் கேட்டுள்ளதாவது:-

இந்த கொள்கை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட இந்திய குடிமக்களின் எண்ணிக்கை மற்றும் வரும் ஆண்டுகளில் பாதிக்கப்படக்கூடியவர்களின் தரவுகள் ஏதேனும் ஒன்றிய அரசு எடுத்துள்ளதா?

இந்த கட்டண மாற்றங்களினால் இந்தியாவின் முக்கிய ஏற்றுமதித் துறைகளான ஜடி, ஜவுளி, மருந்துகள் மற்றும் பொறியியல் பொருட்கள் ஆகியவற்றில் ஏற்படும் தாக்கம் குறித்த ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளதா?

H1B விசா விதிமுறைகளினால் விசா நிராகரிப்பு விகிதங்கள் அதிகமாவது குறித்து ஒன்றிய அரசு அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தாது ஏன்?

5. அங்கன்வாடி சேவையை வலுப்படுத்த நடவடிக்கை என்ன?

காஞ்சிபுரம் ஜி.செல்வம் எம்.பி. மற்றும் திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை எம்.பி. கேள்வி

தமிழ்நாட்டில், குறிப்பாக ராமநாதபுரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஸ்மார்ட் கற்றல் வசதிகள், டிஜிட்டல் கருவிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்புடன் செயல்படும் அங்கன்வாடி மையங்களின் (AWCs) எண்ணிக்கை மற்றும் செயல்பாடுகள் குறித்து திமுகவின் மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினர்.

மேற்கூறிய மாவட்டங்களில் துணை ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் பயனடையும் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்களின் சதவீதம் என்ன? அதில் சிறப்பு கவனம் செலுத்தும் பகுதிகள் என்ன? இந்த மாவட்டங்களில் அங்கன்வாடி சேவைகளை மேலும் வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன? அங்கன்வாடி பணியாளர்களின் திறன் மேம்பாடு, வளர்ச்சி மற்றும் கண்காணிப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை என்ன? மேற்கண்ட மாவட்டங்களில் போஷன் 2.0 இன் கீழ் அரசாங்கம் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார பயன்களை ஆய்வு செய்துள்ளதா? அதன் விவரங்கள் என்ன? என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

6. மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் OBC-களுக்கான இட ஒதுக்கீடு?

ராஜாத்தி சல்மா எம்.பி. கேள்வி

மாநில வேளாண் பல்கலைக்கழகங்களில் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்துவது தொடர்பாக ஒன்றிய அரசு சட்டப்பூர்வமான ஆய்வுகளின் அடிப்படையில் கருத்துக்களை பெற்றுள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களின் அகில இந்திய ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த அரசு முன்மொழிகிறதா?

7. தமிழ் மீனவர்களை கைவிடும் ஒன்றிய அரசு!

தி.மு.க. எம்.பி.க்கள் கண்டனம்

திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா மற்றும் திமுக எம்.பிக்கள் தமிழச்சி தங்கபாண்டியன், தங்க தமிழ்செல்வன், செல்வகணபதி மற்றும் கணபதி ராஜ்குமார்

உலகம் முழுவதும் வெவ்வேறு இடங்களில் சிறைகளில் வாடும் இந்திய மீனவர்களின் நிலை குறித்து கவலை தெரிவித்துள்ள திமுக மக்களவை உறுப்பினர்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்காதது ஏன் என கேள்வி எழுப்பியுள்ளனர்.

சமீபத்தில் டெல்ஃப்ட் தீவு அருகே மீனவர்களை கைது செய்து கொடுமைப்படுத்தப்பட்ட சம்பவம் உட்பட, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 750க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் இது தொடர்பாக எம்.பி.க்கள் மற்றும் தமிழ் நாடு முதல்வரிடமிருந்து கடிதங்கள் பெறப்பட்டும் உரிய நடவடிக்கை எடுக்காதது ஏன்?

மீனவர்களையும் அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தை மற்றும் நடவடிக்கைகள் என்ன?

இந்த கடுமையான பிரச்சினைக்கு நிரந்தர இணக்கமான தீர்வைக் காண வலுவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்ள ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இலங்கையால் கைது செய்யப்பட்டு தண்டனைக்குள்ளான மீனவர்களின் விவரங்கள்?

காயமடைந்த மீனவர்களுக்கு மத்திய அரசிடமிருந்து உடனடி இழப்பீடு அல்லது மறுவாழ்வு கிடைத்துள்ளதா? என பல்வேறு கேள்விகளை கேட்டுள்ள அவர்கள், வெளிநாட்டு கடற்படைகள் இந்திய மீனவர்களை மீண்டும் மீண்டும் மிரட்டவும், தாக்கவும், கைது செய்யவும் அனுமதிக்கும் வகையில், நமது சொந்த கடல் எல்லையில் வலுவான கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்த அரசாங்கம் தவறிவிட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வே.கருணாநிதி தலைமையில் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா பங்கேற்பு!

பம்மல் தெற்கு பகுதியில் துணை முதல்வர் பிறந்த நாள்! மாபெரும் கண் மருத்துவ முகாம்!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் துவக்கி வைக்கிறார்!

சென்னை டிச.6-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர்,துணை முத்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கண் சிகிச்சை முகாம் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர், மண்டல குழுத்தலைவர் வே.கருணாநிதி தலைமையில், கல்யாணி டில்லி எம்.சி, 6வது வட்ட கழக செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் ஆகியோர் வரவேற்புரையில்,

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, பகுதி கழக அவைத் தலைவர் ப. காளேஸ்வரன், பகுதி கழக பொருளாளர் ஆர்.உமாசங்கர், துணைச்செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம், பா. கவிதா,துரை. இளங்கோவன்,மாவட்ட பிரதிநிதி பா. டில்லி,மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன், என்.கே. ரவிச்சந்தின், இரா.கந்தவேலு, ரா.கோகுல், சு. மனோகர் ஆகியோர் முன்னிலையில்

பம்மல் வேதகிரி தெருவில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் இன்று (6.12.2025 - சனிக்கிழமை) காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் முகாமை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்வில் ப சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர்தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் திருமதி. க.வசந்தகுமாரி, மாநகராட்சி துணை மேயர்தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ், பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது , பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர்

அ.தமிழ்மாறன், காஞ்சி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே. வி.சத்திய பிரபு, தலைமை கழக பேச்சாளர் பம்மல் வீ.தினேஷ், முன்னாள் பேரூர் செயலாளர் பா. செல்வம், முன்னாள் பேரூர் செயலாளர் P.S.ரவி வட்டக் கழக செயலாளர்கள் A. அனிஸ்டன், மு.இன்பசேகர் MC, N. காந்தி,முகமது அப்பாஸ்,எம். சுகுமாரன், பி.ஸ்ரீதர், மாமன்ற உறுப்பினர்கள் ஏ. மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இதில் பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட, மாநகர, பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA2), கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர்

வன்னி அரசு தாயார் திருமதி.புஷ்பம் ரத்தினசாமி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 6-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு தாயார் புஷ்பம் ரத்தினசாமி மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் சகோதரர் வன்னி அரசு அவர்களின் அருமைத் தாயார் திருமதி புஷ்பம் ரத்தினசாமி அவர்கள் மறைந்த தகவலறிந்து மிகவும் வருந்தினேன்.

அன்புகாட்டி, அரவணைத்து, ஆளாக்கிய அன்னையினை இழந்து தவிக்கும் சகோதரர் வன்னி அரசு அவர்களின் இருகரம் பற்றி, அவருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்3,வார்டு எண் 41, அப்துல்கலாம் 1வது குறுக்கு தெருவில் மழைநீர் வெள்ளம் சூழ்ந்து பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்ட தகவல் அறிந்த தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு உடனடியாக மாநகராட்சி அதிகாரிகளை தொடர்பு கொண்டு மழைநீரை வெளியேற்றிட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார் அதனை தொடர்ந்து அந்த பகுதிக்கு மாநகராட்சி அதிகாரிகளும் ஊழியர்களும் விரைந்து வந்து டிரக்டர் வாகனத்திலும் மின் மோட்டார்களை பொருத்தியும் மழை நீரை அப்புறப்படுத்தினர்கள். உடன் செம்பாக்கம் பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பகுதி மக்களும் உடனிருந்தனர்.

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்புக்கிணங்க கழக துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி, ஆலோசனைபடி இன்று 06-12-2025 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் பொன்னேரி அருகே வேம்பாக்கத்தில் உள்ள AAM. திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி. சிவாஜி, ஜெ.மூர்த்தி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள்.பிரபு கஜேந்திரன், ப.அப்துல் மாலிக், ஜி.பி.ராஜா, தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ்செல்வராஜ், கவி.கணேசன், மாவட்ட மாநில நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல், ரவி, எஸ்.ரமேஷ், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜ்துரை, ஏ.கே.சுரேஷ் பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி. வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம்விஸ்வநாதன் முன்னிலை வகிக்கிறார்கள் கூட்டம் முன்னதாக ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்

எனவே ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்தகுமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், மு.முரளிதரன், வே.ஆனந்த்குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், அபிராமிகுமரவேல், இரா.அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழஉதயன் உள்பட இளைஞர் அணியை சேர்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள் :- வருகின்ற 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு குறித்து

வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்

பொறுப்பாளர் - திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.